PegLyte
தயார்நிலை

# கொலோனோஸ்கோபி (பெருங்குடல் அகநோக்கியல்) – நோயாளிக்கான வழிமுறைகள்

## காலை 11 மணிக்கு முன்பான அப்பாயிண்ட்மெண்ட்டுகளுக்கு

இந்த தாள் இரட்டை பக்கமுடையது. மிக உயர்ந்த அளவிலான பாதுகாப்பு மற்றும் செயல்திறனை உறுதிப்படுத்த அனைத்து வழிமுறைகளையும் கவனமாகப் படித்துப் பின்பற்றவும். உங்களை வீட்டிற்கு அழைத்து வருவதற்கு துணையாக யாராவது இருக்க வேண்டும்; உங்களால் வாகனம் ஓட்ட முடியாது.

**மருந்துகள்:**

உங்கள் எல்லா மருந்துகள் குறித்தும் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

| | |
|---|---|
| 10 நாட்களுக்கு முன்பிலிருந்து நிறுத்திவிடுங்கள் | Ozempic<br>Wegovy |
| 7 நாட்களுக்கு முன்பிலிருந்து நிறுத்திவிடுங்கள் | Aspirin(ASA 81 மிகி, Entrophen)<br>இரும்புச்சத்து மாத்திரைகள்<br>Clopidogrel (Plavix) |
| 5 நாட்களுக்கு முன்பிலிருந்து நிறுத்திவிடுங்கள் | Coumadin<br>Pradaxa(Dabigatran) |
| 2 நாட்களுக்கு முன்பிலிருந்து நிறுத்திவிடுங்கள் | Xarelto (Rivaroxaban) Eliquis<br>(Apixaban) |

## சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கான சிறப்பு வழிமுறைகள்

| | | |
|---|---|---|
| குறை சர்க்கரைத்தன்மை உள்ளவர்களுக்கான மருந்துகள் (மாத்திரைகள்) | **உங்களது நடைமுறைக்கு முந்தைய நாள்**<br>வழக்கமான டோஸில் ½ அளவு எடுத்துக்கொள்ளுங்கள் | **நடைமுறை செய்யப்படும் நாளன்று எடுத்துக் கொள்ளாதீர்கள்**<br>(நடைமுறைக்குப் பிறகு உணவு எடுக்கும் வரை) |
| இன்சுலின் | **உங்களது நடைமுறைக்கு முந்தைய நாள்**<br>வழக்கமான டோஸில் ½ அளவு எடுத்துக்கொள்ளுங்கள் | **நடைமுறை செய்யப்படும் நாளன்று எடுத்துக் கொள்ளாதீர்கள்**<br>(நடைமுறைக்குப் பிறகு உணவு எடுக்கும் வரை) |
| Ozempic/Wegovy | 10 நாட்களுக்கு முன்பிலிருந்து நிறுத்திவிடுங்கள் | |
| Rybelsus | 1 நாளுக்கு முன்பிலிருந்து நிறுத்திவிடுங்கள் | |

உங்களுக்கு நடைமுறை செய்யப்படும் நாளில் கூட, சிறிய முடக்கு தண்ணீருடன் **இரத்த அழுத்த மருந்துகளை** இயல்பாக எடுத்துக் கொள்ளுங்கள். சிறிய முடக்கு தண்ணீருக்கு மேல் குடிக்க வேண்டாம். உங்கள் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருப்பது முக்கியம்.

## கொலோனோஸ்கோபிக்கான தயார்நிலை சரிபார்ப்புப் பட்டியல்

- ☐ உங்கள் மருந்துகளை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்: உங்கள் பரிசோதனைக்கு முன் நீங்கள் எடுத்துக்கொள்ளும் மருந்துகளில் நிறுத்த வேண்டியவற்றைப் பற்றி உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள்.
- ☐ தயார்நிலை வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்: இந்தத் தாளின் இருபுறமும் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து வழிமுறைகளையும் கவனமாகப் படித்து, உங்களது பரிசோதனைக்கு முன், படிநிலைகளை முடித்து, உணவுக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுங்கள்.
- ☐ நீங்கள் உண்ணும் உணவுகளைக் கவனியுங்கள்: உங்களது பரிசோதனைக்கு முன்பு நீங்கள் என்னென்ன உணவுகளை சாப்பிடலாம் மற்றும் சாப்பிடக்கூடாது என்பதற்கான உதாரணங்களைப் பின்பற்றவும்.
- ☐ சௌகரியமான ஆடைகளை அணியுங்கள்: நடைமுறை அறைக்குள் நுழைந்தவுடன், பரிசோதனை செய்வதற்காக மாற்றுவதற்கு உங்களுக்கு ஒரு கவுன் வழங்கப்படும், ஆடைகளை அணிந்து கழற்றுவதற்கு ஏற்ற எளிதான ஒன்றை அணிவதற்குப் பரிந்துரைக்கிறோம்.
- ☐ உங்களது நடைமுறைக்கு 48 மணி நேரத்திற்கு முன்பு கஞ்சா கலந்த எந்தப் பொருட்களையும் உட்கொள்ள வேண்டாம்.
- ☐ உங்கள் வீட்டிற்குச் செல்வதை உறுதிப்படுத்தவும்: கொலோனோஸ்கோபியின்போது பயன்படுத்தப்படும் மயக்க மருந்துகளின் காரணமாக, உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்ல அல்லது ஒரு டாக்ஸியில் உங்களுடன் வருவதற்கு யாராவது உங்களுக்குத் தேவைப்படும். உடன் வரும் வயது வந்தவர் உங்களை மீட்புப் பிரிவிலிருந்து உங்களை அழைத்துச் செல்ல வேண்டும். நீங்கள் தனியாக இருக்கக்கூடாது. உங்களை அழைத்துச் செல்வதற்கு யாரும் உங்களுடன் வரவில்லை என்றால், உங்கள் நடைமுறை ரத்து செய்யப்படும்

## கொலோனோஸ்கோபிக்கு 7 நாட்களுக்கு முன்பு

☐ ஒரு PegLyte தொகுப்பு மற்றும் Dulcolax 3 x 5 மிகி மாத்திரைகளை வாங்கிக் கொள்ளுங்கள்

- *PegLyte ஐ ஒரு பொதுவான மாற்று கொண்டு மாற்றுவது உங்கள் பெருங்குடல் ஆயத்த செயல்திறனை சமரசம் செய்யக்கூடும் என்பதை நினைவில் கொள்ளவும்.*

## கொலோனோஸ்கோபிக்கு 5 நாட்களுக்கு முன்பு

☐ **கொட்டைப்பருப்புகள்/விதைகள்** உள்ள உணவுகளை சாப்பிடுவதை நிறுத்துங்கள் (இவை ஸ்கோப்களை (அகநோக்கிகளை) சேதப்படுத்தும்).

## கொலோனோஸ்கோபிக்கு 1 நாளுக்கு முன்பு

☐ **<u>முந்தைய நாள் முழுவதும் திட உணவுகள் சாப்பிடக்கூடாது. எதையும் சாப்பிட வேண்டாம்.</u>** உங்கள் கொலோனோஸ்கோபிக்கு 3 மணிநேரத்திற்கு முன்பு வரை மட்டுமே தெளிவான திரவங்களை அருந்துங்கள். உங்களுக்கு காஸ்ட்ரோஸ்கோபியும் இருந்தால், நடைமுறைக்கு 3 மணி நேரத்திற்கு முன்பு வரை மட்டுமே தெளிவான திரவங்களை அருந்துகள்.

<u>நீங்கள் உட்கொள்ளக்கூடிய தெளிவான திரவங்களின் உதாரணங்கள்</u>: தண்ணீர், ஆப்பிள் சாறு, வெள்ளை திராட்சை சாறு, வெள்ளை குருதிநெல்லி சாறு, இஞ்சி சாறு, ஸ்ப்ரைட், இளநீர், *Powerade®, Gastrolyte®,* சோடா தண்ணீர், ஜெல்லோ மற்றும் தெளிவான சூப் (நீர் நொதி மட்டும்). **சிவப்பு/ஊதா பானங்கள் அல்லது ஆல்கஹால் அருந்தக்கூடாது**. காபி அல்லது தேநீர் நீங்கள் சர்க்கரை அல்லது இனிப்பு சேர்ப்பிகளை சேர்க்கலாம். **கிரீம்/பால் பருகக்கூடாது**.

உங்களுக்கு கழிவறைக்கான அணுகல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்; மலமிளக்கியானது குடல் இயக்கத்தைத் தூண்டும்..

☐ காலை - 4 லிட்டர் குளிர்ந்த நீரில் Peglyte தூளைக் கலந்து (பாட்டிலில் குறிக்கப்பட்ட கோட்டளவிற்கு நிரப்பவும்) மற்றும் முழுமையாகக் கரையும் வரை வேகமாக கலக்கவும். மாலையில் குடிக்க தயாராக இருக்கும் வரை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.

☐ **<u>மாலை 3:00 மணிக்கு</u>**, 3 dulcolax மாத்திரைகளை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த மருந்து மலத்தை மென்மையாக்கும்.

☐ **<u>மாலை 5:00 மணிக்கு</u>**, Peglyte தயாரிப்பில் 2 லிட்டர் (பாதி) குடிக்கவும். அடுத்த 2 மணிநேரத்திற்கு ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் ஒரு கப் (250மிலி) குடிக்க வேண்டும். மீதியை குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும். தெளிவான திரவங்களை தொடர்ந்து குடிக்கவும்.

☐ **<u>இரவு 9:00 மணிக்கு</u>**. Peglyte தயாரிப்பில் மீதி 2 லிட்டரை (பாதி) குடிக்கவும். அடுத்த 2 மணிநேரத்திற்கு ஒவ்வொரு 15 நிமிடங்களுக்கும் ஒரு கப் (250மிலி) குடிக்க வேண்டும். தெளிவான திரவங்களை தொடர்ந்து குடிக்கவும்.

## கொலோனோஸ்கோபி செய்யப்படும் நாள்

☐ **<u>உங்கள் நடைமுறைக்குப் பிறகு 1 மணி நேரம் வரை உணவுகள் எடுத்துக் கொள்ளக்கூடாது.</u>**

☐ உங்களது நடைமுறை நாளன்று உங்கள் நடைமுறைக்கு 3 மணி நேரத்திற்கு முன்பு வரை நீங்கள் தண்ணீர் மட்டுமே குடிக்கலாம்.

☐ உங்கள் பரிசோதனைக்கு 3 மணி நேரத்திற்கு முன்பு திரவங்கள் உட்கொள்வதை முற்றிலுமாக நிறுத்துங்கள். உங்களுக்கு காஸ்ட்ரோஸ்கோபியும் இருந்தால், 3 மணி நேரத்திற்கு முன்னதாகவே திரவங்கள் உட்கொள்வதை நிறுத்துங்கள்.

☐ உங்களது மருத்துவ அட்டையைக் கொண்டு வாருங்கள்.

☐ உங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்வதற்கு அல்லது டாக்ஸியில் உங்களுடன் வருவதற்கு யாராவது இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

---

கல்வி இலக்கியம் மற்றும் வீடியோக்கள் உட்பட நடைமுறை பற்றிய கூடுதல் தகவலுக்கு, எங்களது வலைதளம் www.gtaendoscopy.com என்பவற்றை அணுகவும்.
மருத்துவக் குறிப்பு இல்லாமல் உங்கள் நடைமுறைக்கு 3 வணிக நாட்களுக்குள் அதனை நீங்கள் ரத்து செய்தால், **$100 ரத்துசெய்யும் கட்டணம்** உள்ளது என்பதை **<u>நினைவில் கொள்ளவும்</u>**.

**இடம்** - நாங்கள் மார்க்கம் ரோடு மற்றும் மில்னர் அவென்யூவின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளோம். GTA Endoscopy Services: 305 மில்னர் அவென்யூ, சூட் 920. ஸ்கார்பரோ, ON.
**தொலைபேசி**: ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருந்தால் (416) 321-3883 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.